13th August 1963]

(இ) சென்னை 1930-ம் ஆண்டு சூதாட்டப் பந்தயச் சட்டத்தின் 4 (1) (a) (vi) பிரிவில் அதிர்ஷ்டத்தை நம்பிப் பந்தயம் கட்டி அல்லது பணயம் வைத்துப் பந்தயத் தொகையை அல்லது பரிசைப் பணமாகவோ வேறு விதமாகவோ வாங்குவதும், வாங்கிப் பிரித்துக் கொடுப்பதும் தடை செய்யப்பட்டிருக்கிறது. சட்டத்துக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடும் எந்த கிளப் மீதும் போலீஸ் சூப்பிரண்டெண்டுகள் வழக்குத் தொடரலாம். இத்தகைய கிளப்புகளில் நடப்பது யாவும் போலீஸ் துறையினருக்குத் தெரியும். போலீஸ் துறையினர் அடிக்கடி திடீர் சோதனை நடத்தி அவர்களது நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வருகின்றனர்.

திரு. கே. ஏ. மதியழகன்: இது சம்பந்தமாக தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவசியமானபொழுது வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஜே. மாதா கவுடர்: சென்னை நகரில் ஜிம்கானு கிளப்பில் ஒரு நகரசபை அங்கத்தினர் சூதாடினதாகவும் அவர் கைது செய்யப்பட்டதாகவும் சொல்லப்படுகிறதே. அவர் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் என்றும் சொல்லப்படுகிறதே. அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப் பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: மயிலாப்பூர் போலிசார் செய்துவந்த முறையைப் பின்பற்றி, எல்லா இடங்களிலும் செய்தால், எல்லாக் கட்சிக்காரர்களும் இதிலே அங்கம் வகிக்க விரும்புவார்கள் என்பதை நம்முடைய கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எந்தெந்த கட்சியில் யார் யார் சூதாடுகிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. (சிரிப்பு.)

கனம் சபாநாயகர்: சூதாட்டத்திலே கூட கட்சிப் பிரசாரமா, என்ன? (சிரிப்பு.)

வகுப்பில் மாணவியின் மரணம்

*123 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை பாத்திமா கல்லூரியில் பி.யு.சி. வகுப்பு மாணவி கஸ்தூரி என்ற பெண், வகுப்பு நடந்துகொண்டிருந்தபோது திடீரென்று மரணமடைந்தது உண்மையா?

(இ) அப்படியானால், மரணத்திற்குக் காரணமென்ன?

(உ) இது விஷயமாய் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) அம்மாணவி மாரடைப்பினால் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ) கல்லூரி அதிகாரிகள், சவத்தை அம்மாணவியின் பெற்றோர்களிடம் ஒப்படைத்தனர்.

(*a*) Yes.

(*b*) It is reported to be a case of heart failure.

(*c*) The body was handed over to the parents of the girl by the College authorities.

திரு. ஆ. கு. சுப்பையா : இப்படி திடீரென்று மாரடைப்பு வருவதற்குக் காரணம் என்ன ? (சிரிப்பு)

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மாணவியைப் பொருத்த வரையில் கல்லூரியில் சேர்வதற்கு முன்பே மாரடைப்பு ஏற்பட்டது. கல்லூரியில் சேர்ந்தால் கொஞ்சம் உடல் நிலை சரியாக ஆகுமென்று நினைத்து பெற்றோர்கள் அந்த மாணவியை கல்லூரியில் சேர்த்தார்கள். கல்லூரியிலே மெடிகல் பரிசோதனை செய்த பொழுதும் கூட, இருதயம் ரொம்பவும் 'வீக்காக' இருக்கிறது என்று பெற்றோர்களுக்குத் தெரிவித்திருந்தார்கள். இந்த நிலையிலேதான் திடீரென்று அந்த மாணவிக்கு மாரடைப்பு ஏற்பட்டது.

Salem District Board

* 125 *Q*.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state what amount is due to Government from the erstwhile Salem District Board?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Rs. 4·83 lakhs.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்தத் தொகையை மாஜி டிஸ்ட்ரிக்ட் போர்டிலிருந்து வசூலிக்க என்ன திட்டங்கள் இருக்கின்றன.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஜில்லா போர்டைப் பொருத்த வரை அவர்களுக்கு ஸ்தாவர சொத்துக்கள் இருக்கின்றன. அவற்றை அட்ஜஸ்ட் செய்து, அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய பணத்தை வசூலிக்க வேண்டியது பற்றி பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : அந்த ஸ்தாவர சொத்தில் மீதம் இருக்கும் தொகையை பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்குப் பிரித்துக் கொடுக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது வேறு விஷயம். சாதாரணமாக எந்த மாவட்ட போர்டானாலும், ஸ்தாவர சொத்துக்கள் என்ன செய்யப் படுகிறதோ அம்மாதிரி இதிலும் கவனம் செலுத்தப்படும்.